
# சோழவந்தான்












## சோழவந்தான்

திண்டுகல்லிருந்து மதுரை செல்லும் பண்டைய பெருவழியில் அமைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் சோழவந்தான். வைகைக் கரையில் உள்ள இவ்வூரின் பழைய பெயர் **பாகனூர்** என்பதாகும். பாகனூர்க்கூற்றம் என்றழைக்கப்படும் பண்டைய நாட்டுப்பிரிவில் இது இருந்துள்ளதை வேள்விக்குடிச் செப்பேடு மூலம் அறியமுடிகிறது. முற்காலப் பாண்டியர் காலத்தில் இது பராந்தக வீரநாராணன் பெயரால் **பராந்தகச் சதுர்வேதிமங்கலம்** என்ற பெயரால் பிரம்மதேயமாக (பிராமணர் குடியிருப்பாக) மாற்றப்பட்டுள்ளது.பின்னர் பத்தாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் பெயரால் **சோழாந்தகச் சதுர்வேதிமங்கலம்** என்று அழைக்கப்பட்டுள்ளது.

சோழனுக்குக் காலன் போன்றவன் 'சோழாந்தகன்' என்ற தனது பட்டப்பெயரால் இவ்வூருக்கு வீரபாண்டியன் **சோழாந்தகச் சதுர்வேதிமங்கலம்** என்று பெயரிட்டிருக்கின்றான். முதலாம் இராஜராஜசோழன் இவ்வூரைக் கைப்பற்றி ஆண்டபோது இப்பெயரை விரும்பாமல் **'ஜனநாதன்'** என்ற தனது பட்டப்பெயரில் **ஜனநாதச் சதுர்வேதிமங்கலம்** என்று பெயரிட்டுள்ளான். சோழர் ஆட்சி இப்பகுதியில் மறைந்து பாண்டியர் ஆட்சி இப்பகுதியில் ஏற்பட்டபோது மீண்டும் இவ்வூர் பாண்டியர் பெயரால் **சோழகுலாந்தகச் சதுர்வேதிமங்கலம்** என்று பெயர் மாற்றி அழைக்கப்பட்டுள்ளது.இப்பெயரே இன்று மக்கள் வழக்கில் மாறி சோழவந்தான் என்று வழங்கப்படுகிறது.சோழவந்தான் கோயில்களில் கி.பி.௯, 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலப்பாண்டியர் காலத்து வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன. இதனைத் தொடர்ந்து முதலாம் இராசராசசோழன் போன்ற சோழமன்னர்கள், பிற்காலப்பாண்டிய மன்னர்கள் கல்வெட்டுகள், நாயக்கமன்னர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.






தொன்மைச் சிறப்புவாய்ந்த பழங்கல்வெட்டுகள் நிறைந்த **ஜனகை நாராயணப் பெருமாள்** கோயிலும், பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டு நாயக்கர் காலத்திலும் அண்மைக் காலத்திலும் திருப்பணி செய்யப்பட்ட **பிரளயநாதசுவாமி** என்றழைக்கப்படும் சிவன்கோயிலும் சோழவந்தானில்

உள்ளன. இதனைத் தவிர ஊர்மக்களால் சிறப்பாக வழிபடப்படும் **ஜனகை மாரியம்மன்** கோயிலும் பிறகிராமக் கோயில்களும் உள்ளன.பண்டைய பெருவழியில் அமைந்த இவ்வூரில் இராணிமங்கம்மாளால் கட்டப்பட்ட சத்திரம் ஒன்றும் உள்ளது. இச்சத்திரத்தின் பயன்பாடு குறைந்து அழிவுற்ற நிலையில் இதன் வருமானத்தினைக் கொண்டு மதுரை இரயில்வே நிலையம் எதிரில் உள்ள மங்கம்மாள் சத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.






சோழவந்தான் பல பழைமையான குடியிருப்புக்களைக் கொண்ட பேரூராக விளங்கிவருகிறது. நான்கு தேரோடும் வீதிகளைக் கொண்ட இவ்வூர் பகுதியில் பல கோயில்கள் உள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவையாக வாலகுருநாத-அங்காளஈஸ்வரி கோயில், வடக்கத்தி காளியம்மன் கோயில், பொய்கை விநாயகர்- சொர்ணமாலீஸ்வரர் கோயில், பத்திரகாளியம்மன் கோயில், உச்சிமகாளியம்மன் கோயில், முதலிய கோயில்கள் உள்ளன.
















சோழவந்தான் இரட்டை அக்ரஹாரம், ஒற்றை அக்ரஹாரம் பகுதியில் கிருஷ்ணன் கோயில், ஆஞ்சநேயர் கோயில்கள் உள்ளன. இப்பகுதியில் இருந்த மங்கம்மாள் சத்திரம் இன்று பள்ளிக்கூடமாக மாற்றிக் கட்டப்பட்டுள்ளது. இதனையடுத்துள்ள முதலியார் கோட்டை, சங்கங்கோட்டை பகுதியில் கோட்டைவாசல் காளியம்மன் கோயில் உள்ளது. மதுரை நாயக்க மன்னர் விஸ்வநாத நாயக்கர் காலத்தில் அவரது தளவாயாக விளங்கிய அரியநாத முதலியார் காஞ்சிபுரம் பகுதியிலுள்ள மப்பேடு என்ற ஊரிலிருந்து முதலியார் சமூகத்தினர் பலரைச் சோழவந்தான் முதலியார் கோட்டைப் பகுதியில் குடியேற்றியுள்ளார்.

சோழவந்தானில் முதலியார் கோட்டையை அடுத்து பேட்டை அக்ரஹாரம் உள்ளது.இங்கு கிருஷ்ணன் கோயிலும் வீரமகாளியம்மன் கோயிலும் உள்ளன.ஆண்டுதோறும் சித்ராபௌர்ணமி அன்று சோழவந்தான் வைகையாற்றில் ஆற்றில் ஜனகை நாராயணப் பெருமாள் இறங்கும் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. சோழவந்தானில் இசுலாமியருக்குரிய பள்ளிவாசலும் கிருத்தவருக்குரிய தேவாலயமும் உள்ளன.







சோழவந்தான் மக்களின் அடிப்படை ஆதாரமாக விளங்கும் மிகப்பெரிய பாசனயேரி (மேட்டுநீரேத்தாண் கண்மாய்)வடகரைக் கண்மாயாகும்.1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்வேரியில் பழமையான கல்மடை ஒன்று உள்ளது. இதன் கரையில் கன்னிமார், அய்யனார், விநாயகர், கருப்பர் கோயில்கள் உள்ளன. சோழவந்தான் வெற்றிலைக்குப் பெயர்போன வளமான நெல் விளையும் ஊராகும். இவ்வூரில் அறிஞர் பலர் வாழ்ந்துள்ளனர். அரசன் சண்முகனார் என்ற பெருந்தமிழ்ப் புலவர் இவ்வூரில் வாழ்ந்துள்ளார்.

**சோழவந்தான் பொறுப்பான சுற்றுலா**

**சோழவந்தான்** வட்டார களஞ்சியம் தற்சமயம் 2893 உறுப்பினர்களுடன் கடந்த 2005 ஆண்டு முதல் இப்பகுதியின் பெண்கள் வளர்ச்சிக்காக செயல்பட்டு வருகிறது. ஆர்வமுள்ள களஞ்சியம் பெண்கள் சுய உதவிக் குழுவினர் ஒன்றிணைந்து **சோழவந்தான்** பாரம்பரியம் மற்றும் விருந்தோம்பல் குழு ஒன்றை அமைத்து **சோழவந்தான்** மருதம் இயற்கை / கலாச்சாரம் / விவசாய பாரம்பரியச் சிறப்புகளை கண்டு இன்புற உதவி செய்கின்றனர்.இந்தக் குழுவின் விருந்தோம்பலை நெதர்லாந்து, பிரான்சு போன்ற நாட்டின் பயணிகளும்,மாணவர்களும் தமிழக கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவியரும் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர்.

**----- முனைவர். வெ.வேதாசலம், முனைவர்.கு.சேதுராமன் தொல்லியல், கலை, வரலாற்று ஆய்வாளர்கள், மதுரை.**





